# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1664 - 2010 ජූලි මස 23 වැනි සිකුරාදා - 2010.07.23

*1664 ஆம் இலக்கம் – 2010 ஆம் ஆண்டு யூலை மாதம் 23 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 1030 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1031 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, யூலை மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, யூலை மாதம் 16 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான ''புதிய சேர்வாளர்கள்'' ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு, இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - களுத்துறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பிரிவிற்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளர்களாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

3. இப்பதவிக்காக ஆண்/பெண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

4. விண்ணப்பதாரரின் வயது 21 வருடங்களுக்கு குறையாமல் இருப்பதோடு, 65 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

6. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரங்களை உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

7. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

8. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2010, ஆவணி மாதம் 23 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் அலுவலகம்,
இல. 234/ஏ3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2010, ஆடி 07.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| களுத்துறை | களுத்துறை | உக்கல்பட பிரிவில் பிறப்பு, இறப்பு மற்றும் உடுநுவர/பாணந்துறை தொட்டவத்த பிரிவில் விவாகம் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்டச் செயலகம், களுத்துறை |

7-718

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## உயர் கல்வி அமைச்சு

### இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)

*பொறியியலில் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) பாடநெறிகளுக்கு மாணவர் அனுமதி கல்வியாண்டு - 2010/2011*

மேற்காணும் பாடநெறிக்கு பிரவேசிப்பதற்காக பொருத்தமான தகைமை பெற்ற விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா கோட்பாடு மூலமான (Theory) மூன்று ஆண்டுகால பயிற்சியினையும், ஆறு மாத காலத்தினைக் கொண்ட உள்ளக பயிற்சியினையும் உள்ளடக்கிய முழு நேர ஆங்கில மொழி மூல பாடநெறியாகும். குடிசார், மின்சார மற்றும் இயந்திரப் பொறியியல் ஆகிய மூன்று விசேட துறைகளை இப்பாடநெறி உள்ளடக்கியதாகும். உயர் தேசிய பொறியியல் பாடநெறிக்கான சான்றிதழானது லண்டன் பொறியியல் கழகத்தின் CEI (லண்டன்) பரீட்சையின் முதலாம் கட்டத்திலிருந்து (Part one) விதிவிலக்களிக்கப் படுவதற்கான தகைமையினைக் கொண்டுள்ளதுடன் இலங்கை பொறியியல் நிறுவனத்தின் முதலாம் (Part one) பரீட்சையிலிருந்தும் விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தென் அவுஸ்திரேலிய பல்கலைக்கழகத்தின் (University of South Australia) நான்கு வருட பொறியியல் பாடநெறி (B. Sc.) உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறிச் சான்றிதழின் தகைமைகளை பின்வரும் மதிப்பீடுகளுக்கு உள்ளடக்கியுள்ளது :

(1) இயந்திரப் பொறியியல் துறைக்கு - 02 வருடங்கள் விடுவிப்பும்,
(2) சிவில் பொறியியல் துறைக்கு - 02 வருடங்கள் விடுவிப்பும்,
(3) மின் பொறியியல் துறைக்கு - 1 1/2 வருடங்களுக்கான விடுவிப்பும் வழங்கப்படும்.

ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த சில முதற்தர பல்கலைக்கழகங்கள் சிலவும், உயர் தேசிய பொறியியல் டிப்ளோமா பாடநெறிச் சான்றிதழினை முடித்தவர்களுக்கு, முடிந்த ஒரு வருடத்திற்குள் தங்களது பொறியியல் பாடநெறியைக் (B.Sc.) கற்போருக்கு IELTS பரீட்சையிலிருந்து விலக்கும் அவர்களது பாடநெறி முடிவில் 2 வருடங்கள் வேலை செய்வதற்கான அனுமதியும் (Work Permit) அளிக்க முன்வந்துள்ளன.

ஆஸ்திரிய, நெதர்லாந்து அரசாங்கங்களின் உதவியுடன் HNDE பாடநெறிக்கான பாடவிதானங்களும் பௌதீக வளங்களும் தரமுயர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களின் முகவரிகளும், தொலைபேசி இலக்கங்களும் :

(Addresses, Telephone Numbers & the Code Numbers of the Advanced Technological Institutes) :

| *No.* | *Institute* | *Address* | *Telephone No.* | *Telephone No.* |
|---|---|---|---|---|
| 1 | Advanced Technological Institute-Mattakuliya | No. 42, Rodrigo Place, Colombo 15 | 011-2529479 | 011-2521152 |
| 2 | Advanced Technological Institute-Labuduwa | Siridamma Mawatha, Labuduwa, Akmeemana | 091-2227880 | 091-2246179 |

பாடநெறிக்கென சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும் :-

(1) விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளரினால் 2009 இல் அல்லது அதற்கு முன்னர் நடத்தப்பட்ட க. பொ. த. (உ/த) (புதிய பாடத்திட்டத்தில்) ஆகக் குறைந்தது இணைந்த கணிதம், பௌதிக விஞ்ஞானம், இரசாயன விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் ஒரே அமர்வில் மூன்று சித்திகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(3) க. பொ. த. (சா/த) பரீட்சையில் ஆங்கில மொழியில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிக்கு 23 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் கிழமை நாட்களில் வகுப்புக்களுக்கு சமுகமளிப்பதோடு தேவை ஏற்படும் பட்சத்தில் வார இறுதி நாட்களிலும் வகுப்புகளுக்கு சமுகமளித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவத்தினை கீழே கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பத்திற்கமைய தயாரிக்குமாறு வேண்டப்படுகின்றனர். அந்தந்த பாடநெறிகளுக்கு தேர்ந்தெடுக்கப் படும் போது க. பொ. த. (உ/த) பரீட்சையில் பெற்றுக்கொண்ட புள்ளிகள் அல்லது Z - Score கவனத்திற் கொள்ளப்படும்.

விண்ணப்பக் கட்டணம் ரூபா 250 ஆகும். இக்கட்டணம் ஹை பார்க் கோணர் மக்கள் வங்கி, பார்க் வீதி கிளையில் (People's Bank, Hyde Park Corner Branch) அல்லது இலங்கையிலுள்ள ஏதேனும் மக்கள் வங்கிக் கிளையில் நடைமுறைக் கணக்கு இல. 025100133397613 இற்கு வரவு வைத்து ரசீதை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவும். மேற்கூறப்பட்ட கணக்கிற்கு அன்றி வேறு கணக்கிற்கு வரவுவைக்கப்பட்ட பற்றுச்சீட்டுடன் கூடிய விண்ணப்பப் படிவம் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மட்டக்குளி உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் "பணிப்பாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம், இல. 42, றொட்றிகோ பிளேஸ், மட்டக்குளி, கொழும்பு 15" என்ற விலாசத்திற்கும், லபுதுவ உயர் தொழில்நுட்ப நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க விரும்புவோர் "சிறிதம்ம மாவத்தை, லபுதுவ, அக்மீமன (Siridamma Mawatha, Labuduwa, Akmeemana) என்ற விலாசத்திற்கும் அல்லது இரு உயர்தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் விண்ணப்பிக்க விரும்புவோர் மேற்குறிப்பிட்ட இரு உயர் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும் தனித்தனியான வங்கி பற்றுச்சீட்டு இணைக்கப்பட்ட தனித்தனியான விண்ணப்பங்களை அந்தந்த உயர் தொழில்நுட்ப நிறுவனங்களின் முகவரியிட்டு 2010.08.14 ஆந் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் பெரிய எழுத்துக்களில் "APPLICATION FOR ADMISSION TO HNDE COURSE 2010/2011" என எழுதுமாறு விண்ணப்பதாரிகள் வேண்டப்படுகின்றனர்.

இலங்கையிலுள்ள ஏதேனும் பல்கலைக்கழகத்தில்/ இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரியில்/தொழில்நுட்பக் கல்லூரியில், கல்வியியல் கல்லூரியில்/ ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை அல்லது ஏதேனும் உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ளக மாணவராக பதிவு செய்துகொண்டுள்ள மாணவர்கள் அல்லது இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனத்தில் உள்ளக மாணவராக பாடநெறியைப் பின்பற்றுகின்ற மாணவர்கள், இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் முழுநேர மாணவராக பதிவு செய்து கொள்ளப்படுவதற்கு தகுதிபெற மாட்டார்கள். எவரேனும் ஒரு மாணவர் ஒரே சமயத்தில் மேலே குறிப்பிட்டுள்ள ஏதேனும் அரச நிறுவனம் ஒன்றில் முழுநேர பாடநெறியைத் தொடருபவர் என அறியவருமிடத்து அவரது பதிவு இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தினால் உடனடியாக இரத்துச் செய்யப்படும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

மட்டக்குளி, லபுதுவ உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனங்களின் பொறியியல் துறையின் 2010/ 2011 கல்வியாண்டிற்கு சேர்த்துக் கொள்ளப்படுவது தொடர்பாக இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மேற்கொள்ளும் தீர்மானமே இறுதியானதாகும் என்பதை தயவு செய்து கவனிக்கவும்.

எச். டீ. கமல் பத்மசிறி,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம்,
இல. 18/2, வோர்ட் பிளேஸ்,
கொழும்பு 07.
Web site : www.sliate.net.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை உயர் தொழில்நுட்பக் கல்வி நிறுவனம் (SLIATE)**

***பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (HNDE) பாடநெறிக்கு மாணவர்கள் அனுமதி கல்வியாண்டு - 2010/2011***

உமது 1 ஆம் விருப்ப உயர் தொழில்நுட்ப நிறுவனத்தின் இலக்கம் (விளம்பரத்தை பார்க்கவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :

2. முதலெழுத்துக்கள் குறிக்கின்ற பெயர்கள் :

3. தேசிய அடையாள அட்டை இல. :

4. பிறந்த திகதி :

5. பால் : ஆண்/பெண்

6. நிரந்தர விலாசம் : (கீழேயுள்ள பெட்டியுனுள்)

7. நிர்வாக மாவட்டம் :

8. முன்னுரிமை பொறியியல்துறை :

| | |
|---|---|
| 1 ஆவது முன்னுரிமை | |
| 2 ஆவது முன்னுரிமை | |
| 3 ஆவது முன்னுரிமை | |

9. க. பொ. த. (சா. த.) இல் ஆங்கில மொழிக்கான பெறுபேறு :

| ஆண்டு | சுட்டிலக்கம் | தரம் |
|---|---|---|
| | | |

10. (2009 இல் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ/த) பரீட்சையில் சிறந்த முயற்சியின் பெறுபேறு :

| பாடம் | தரம் |
|---|---|
| 1. இணைந்த கணிதம் | |
| 2. பௌதீகம் | |
| 3. இரசாயனம் | |
| 4. பொதுச் சாதாரண பரீட்சை | |
| 5. சராசரி Z - புள்ளிகள் | |

11.

| ஆண்டு | சுட்டிலக்கம் | மொழிமூலம் |
|---|---|---|
| | | |

| முயற்சி | 1 ஆவது | | 2 ஆவது | | 3 ஆவது | |
|---|---|---|---|---|---|---|

எந்தவொரு அரச நிறுவனத்திலும் எந்தவொரு முழுநேரப் பாடநெறியையும் நான் பின்தொடர்வதில்லை என இத்தால் பிரகடனப்படுத்துகின்றேன். எனது பிரகடனத்துக்கு மாறாக வேறு அரச நிறுவனத்தில் ஒரே சமயத்தில் முழுநேரப் பாடநெறியைப் பின்தொடர்வதனைக் கண்டுபிடிக்கப்படுமிடத்து கற்கின்ற காலப்பகுதியில் எந்த நேரத்திலும் எனது பதிவு இரத்துச்செய்யப்படும் என்பதை நான் அறிவேன். மேலும் எனது அறிவுக்கு எட்டியவரை இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் உண்மையெனவும் சரியானதெனவும் நான் உறுதிப்படுத்துகின்றேன்.

-----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

(ரூபா 250 க்கான வங்கி ரசீது இணைக்கப்படல் வேண்டும்.)

7-574

## இலங்கைப் பொலிஸ்

### உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களைத் தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

இவ்வறிவித்தலில் 'அமைச்சரவை' என்னும் பதம் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் அமைச்சரவையைக் குறிக்கின்றது.

1. **பரீட்சை :**

1.1 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்ளைத் தெரிவுசெய்வதற்கான போட்டிப் பரீட்சையொன்று கொழும்பில் நடாத்தப்படும். பரீட்சைக்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

1.2 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

1.3 நிரப்பப்படவேண்டிய வெற்றிடங்களின் எண்ணிக்கை மற்றும் நியமனம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி அமைச்சரவையினால் தீர்மானிக்கப்படும்.

1.4 பொதுமக்களின் நன்மை கருதி இவ்வெற்றிடங்கள் நிரப்பப்படக் கூடாதென அமைச்சரவை தீர்மானிக்கும் பட்சத்தில் பரீட்சை பின்போடப்படலாம் அல்லது இரத்துச் செய்யப்படலாம்.

2. **தகைமைகள் :**

2.1 சாதாரண பொலிஸ் சேவையின் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவியின் பொருட்டு,

2.1.1 பரீட்சார்த்தி :

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்லைகலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகமொன்றின் பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருத்தல் வேண்டும் ;

(உ) விவாகமாகாதவராக இருத்தல் வேண்டும் ;

(ஊ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக் கியத்தையும் கொண்ருத்தல் வேண்டும் ;

(எ) மூக்குக் கண்ணாடி அல்லது கொன்ராக் வில்லைகள் எதுவுமில்லாமல் கண் பார்வை ஆகக்குறைந்தது 6/6 மற்றும் 6/ 12 க்கு இடைப்பட்டதாயிருத்தல் வேண்டுமென்பதுடன் நிறப்பார்வை சாதாரணமாக இருத்தல் வேண்டும் ;

(ஏ) 05 அடி 06 அங்குலத்திற்குக் குறையாத உயரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஐ) ஆணாக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு 1**.- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டதாரிகளாகவும் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கும் பொலிஸ் அலுவலகர்கள் ஏனைய தகைமைகளில் தகுதி பெற்றிருந்தால், அவர்களும் வெளிவாரி விண்ணப்பதாரிகளாக இப்பரீட்சைக்குத் தோற்றலாம். அத்தகைய விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

**குறிப்பு 2**.- விளையாட்டுத் துறையில் நாட்டைப் பிரதிநிதித்துவப் படுத்தி இலங்கையில் அல்லது வெளிநாட்டில் சிறந்து விளங்கிய, அல்லது இலங்கையில் தேசிய மட்டத்திலான விளையாட்டு விழாக்கள் அல்லது போட்டிகளில் போற்றத்தக்க விதத்தில் திறமைகளை வெளிக்காட்டியுள்ள விண்ணப்பதாரர் ஒருவர் ஏனைய எல்லாத் தேவைகளையும் திருப்திப்படுத்துமிடத்து உடல்சார் தேவைகளில் அரை அங்குலம் குறைவாக இருப்பினும் அவரைத் தெரிவுசெய்வதற்கான உரிமையை அமைச்சரவை தன்னகத்தே கொண்டிருக்கும்.

2.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மருத்துவ உத்தியோகத்தர்) பதவியின் பொருட்டு-

2.2.1 பரீட்சார்த்தி-

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்லைகலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மேலைத்தேய மருத்துவம் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(உ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(ஊ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகா ரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(எ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

2.2.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மருத்துவ உத்தியோகத்தர்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (மருத்துவ உத்தியோகத்தர்) பதவி வரை மட்டுமேயாகும்.

2.3 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மருத்துவ உத்தியோகத்தர்) பதவியின் பொருட்டு :

2.3.1 பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மேலைத்தேய மருத்துவம் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) இலங்கை மருத்துவ சபையில் முழுமையான பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும் ;

(உ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(ஊ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(எ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

2.3.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (தகவல் தொழில்நுட்பம்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மாஅதிபர் (தகவல் தொழில்நுட்பம்) பதவி வரை மட்டுமேயாகும்.

2.4 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (குடிசார் எந்திரவியலாளர்) பதவியின் பொருட்டு :

2.4.1 பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் குடிசார் எந்திரவியல் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(உ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

2.4.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (குடிசார் இயந்திரவியல்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (குடிசார் எந்திரவியல்) பதவி வரை மட்டுமேயாகும்.

2.5 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (கட்டிடக் கலைஞர்) பதவியின் பொருட்டு :

2.5.1 பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் கட்டிடக் கலை தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(உ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

2.5.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (கட்டிடக் கலைஞர்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (கட்டிடக் கலைஞர்) பதவி வரை மட்டுமேயாகும்.

2.6 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மின் எந்திரவியலாளர்) பதவியின் பொருட்டு :

2.6.1 பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக மொன்றின் மின் எந்திரவியல் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(உ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

2.6.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மின் எந்திரவியலாளர்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (மின் எந்திரவியலாளர்) பதவி வரை மட்டுமேயாகும்.

*2.7 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (தொழில்நுட்ப எந்திரவியலாளர்) பதவியின் பொருட்டு :*

*2.7.1* பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் தொழில்நுட்ப எந்திரவியல் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(உ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

*2.7.2* உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (தொழில்நுட்ப எந்திரவியலாளர்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (தொழில்நுட்ப எந்திரவியலாளர்) பதவி வரை மட்டுமேயாகும்.

*2.8 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (இலத்திரனியல் எந்திரவியலாளர்) பதவியின் பொருட்டு :*

*2.8.1* பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் இலத்திரனியல் எந்திரவியல் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(உ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

*2.8.2* உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (இலத்திரனியல் எந்திரவியலாளர்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (இலத்திரனியல் எந்திரவியலாளர்) பதவி வரை மட்டுமேயாகும்.

*2.9 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (விலங்கு மருத்துவர்) பதவியின் பொருட்டு :*

*2.9.1* பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் விலங்கு மருத்துவம் தொடர்பிலான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்கலாம் ;

(உ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திரமான உடல் கட்டமைப்பையும் தேகாரோக்கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(ஊ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம்.

*2.9.2* உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (விலங்கு மருத்துவர்) பதவியில் தொழில் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (விலங்கு மருத்துவர்) பதவி வரை மட்டுமேயாகும்.

*2.10 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மேலைத்தேய பாண்ட் வாத்தியக் கலைஞர்) பதவியின் பொருட்டு :*

*2.10.1* பரீட்சார்த்தி -

(அ) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்ப முடிவுத் திகதியன்று 22 வயதுக்குக் குறையாதவராகவும் 32 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் ;

(இ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் அழகியல் இசைக் கலை தொடர்பிலான பட்டதாரி ஒருவராக அல்லது அதற்குச் சமமான பட்டதாரி ஒருவராக இருத்தல் வேண்டும் ;

(ஈ) லண்டன் ரோயல்/டிறின்ற் இசைக் கல்லூரியில் மேலைத்தேய இசை தொடர்பான ஒரு டிப்ளோமாவை (நடைமுறை மற்றும் கோட்பாட்டு) பெற்றிருத்தல் வேண்டும் லண்டன் ரோயல்/ டிறின்ற் டிப்ளோமா (நடைமுறை) மட்டும் சித்தியடைந் திருப்பின் மேலைத்தேய இசை VI ஆம் தரம் கோட்பாட்டில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

(உ) மேலைத்தேய இசைக் கருவிகள் (Brass Wood Wind Instruments) மற்றும் (Piano String Instruments) இசைக்கக் கூடிய ஆற்றலைப் பெற்றிருத்தல் வேண்டும்.

(ஊ) மேலைத்தேய இசைக் குழுக்களை வழிநடத்தல், மேலைத்தேய இசை சீரமைத்தல் (Arrangements) தொடர்பில் அறிவைப் பெற்றிருத்தல் வேண்டும்

(எ) இலங்கையில் எப்பாகத்திலும் பணியாற்றுவதற்கான திடகாத்திர மான உடல் கட்டமைப்பையும் தேகாரோக் கியத்தையும் கொண்டிருத்தல் வேண்டும் ;

(எ) ஆணாக அல்லது பெண்ணாக இருக்கலாம் ;

(ஐ) விவாகமானவராக அல்லது விவாகமாகாதவராக இருக்க லாம்.

2.10.2 உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் (மேலைத்தேய பாண்ட் வாத்தியக் கலைஞர்) பதவியில் தொழல் உயர்வு பிரதிப் பொலிஸ் மா அதிபர் (மேலைத்தேய மேள வாத்தியர்) பதவி வரை மட்டுமேயாகும்.

3. மேற்படி இலக்கம் 2.2 முதல் 2.10 வரையிலான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு மேலதிகக் கல்வி நடவடிக்கைகளுக்காக வசதி செய்து கொடுக்கப்படும்.

4. மேற்படி இலக்கம் 2.2 முதல் 2.10 வரையிலான பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் பொலிஸ் கடமைகளில் ஈடுபடுத்தப்பட மாட்டார்கள் என்பதோடு அவர்கள் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட தொழில்களில் மட்டுமே ஈடுபடுத்தப்படுவார்கள்.

5. **சம்பள அளவுத் திட்டம்**.- 2006.04.25 ஆந் திகதிய 6/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின்படி எஸ். எல். 1-2006 சம்பள அளவுத் திட்டம் ஏற்புடையதாகிறது. இதன்படி,

*மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.*- ரூபா 22,935-10 x 645 - 8 x 790 - 17 x 1,050 - ரூபா 53,555 (ரூபா 24,870 க்கு முன்னர் தடைகாண் பரீட்சை)

6. **தெரிவுசெய்யும் முறை**.- விண்ணப்பதாரர்களை தெரிவுசெய்யும் முறை பின்வருமாறு :

6.1 *அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் பரீட்சை.*- கிடைக்கப்பெற்றுள்ள விண்ணப்பங்களிலிருந்து விண்ணப்பதாரர்கள் அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சித்துப் பார்க்கும் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். இப்பரீட்சையின்போது-

(அ) உயரம் பரீட்சித்துப் பார்க்கப்படும் ;
(ஆ) சான்றிதழ்களின் மூலப்பிரதிகள் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

6.2 *எழுத்துப் பரீட்சை.*- அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே எழுத்துப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். எழுத்துப் பரீட்சையானது பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும் என்பதுடன், பின்வரும் பாடங்களைக் கொண்டுள்ளது. ஒவ்வொரு வினாத்தாளுக்குமான காலமும் புள்ளிகளும் பின்வருமாறு.-

(1) நுண்ணறிவு (01 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(2) பொது அறிவு (01 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்
(3) மொழித்திறன் (02 மணித்தியாலம்) - 100 புள்ளிகள்

6.3 *வாய்மொழிப் பரீட்சை.*- வாய்மொழிப் பரீட்சைக்கு 100 புள்ளிகள் வழங்கப்படும்.

**குறிப்பு** (i) : எழுத்துப் பரீட்சையில் ஆகக்குறைந்தது 40% புள்ளிகளையாவது பெற்றுள்ள விண்ணப்பதாரர்களின் புள்ளிகளின் கூட்டுத்தொகையின்படி தயார்செய்யப்பட்ட முன்னுரிமை பட்டியலிலிருந்து இப்பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

**குறிப்பு** (ii) : எழுத்துப் பரீட்சையில் பெற்ற புள்ளிகள் நேர்முகப் பரீட்சை சபைக்கு சமர்ப்பிக்கப்பட மாட்டாது.

6.4 *பின்னணிப் பரீட்சை.*- விண்ணப்பதாரர்களின் நல்லொழுக்கம் மற்றும் நடத்தையைப் பற்றி ஆராய்ந்து பார்ப்பதற்காக அவரது மற்றும் அவரது நெருங்கிய உறவினர்கள் மற்றும் தெரிந்த ஆட்களைப் பற்றி பின்னணி அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்படும்.

விண்ணப்பதாரர் ஒருவரை ஆட்சேர்ப்புச் செய்யும்போது பொய்யான தகவல்களை வழங்குதல் அல்லது தகாத பின்னணி அறிக்கையொன்றைக் கொண்டுள்ளவராக இருத்தல், ஆட்சேர்ப்பு செய்யாதிருப்பதற்கு அல்லது ஆட்சேர்ப்பு செய்யப்பட்டதன் பின்னர் சேவையை இரத்துச் செய்வதற்கு காரணமாகிறது.

6.5 *மருத்துவப் பரீட்சை.*- தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்ப தாரர்கள் நாட்டின் எப்பாகத்திலும் ஒரு பொலிஸ் அலுவலராகச் சேவை செய்வதற்காக அவரது உடல் ஆரோக்கியத்தைப் பற்றிய மருத்துவப் பரீட்சையொன்றில் தோற்றுதல் வேண்டும்.

6.6 *பயிற்சிக்கு அழைத்தல்.*- மருத்துவப் பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரர்கள் மாத்திரமே பயிற்சிக்காக அழைக்கப்படுவார்கள். அனைத்துப் பதவிகளுக்கும் தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஒரு வருட கால ஆரம்பப் பயிற்சி வழங்கப்படும்.

7. பரீட்சைக்கான மொழிமூலம் -

(அ) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடாத்தப்படும்.

(ஆ) விண்ணப்பதாரர் தாம் தகைமையைப் பெற்ற பரீட்சையில் சித்தியடைந்த மொழியில் அல்லது அரசகரும மொழி மூலமே பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் தகைமைகளைப் பெற்ற பரீட்சையின் பாடங்களை இரு மொழிகளில் அல்லது அதற்கு மேற்பட்ட மொழிகளில் சித்தியடைந்திருப்பின் அப்பரீட்சையில் அவர் சித்தியடைந்த பாடங்களில் கூடுதலான பாடங்களுக்கு தோற்றிய மொழியில் அல்லது அரச கரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

(ஈ) பிரதானமான பாடத்தை ஒரு மொழியிலும், மேலதிக பாடங்களை இன்னொரு மொழியிலும் சித்தியடைந்துள்ள விசேட பட்டம் பெற்றுள்ள விண்ணப்பதாரர்கள் பிரதான பாடத்தில் சித்திடையந்த மொழியில் அல்லது அரசகரும மொழியொன்றில் பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

**குறிப்பு.-** (i) மேலே (அ) மற்றும் (இ) இல் தகைமை பெற்ற பரீட்சை என்பது 2.1 (இ) பந்தியிலும் 2.1 இன் குறிப்பு 1 இலும் உள்ள பரீட்சையாகும்.

(ii) விண்ணப்பதாரர் ஒருவர் பரீட்சையில் தோற்றும் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும்.

(iii) தமது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தை மாற்றிக்கொள்வதற்கு விண்ணப்பதாரர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

8. **பாட விதானம் :**

(1) நுண்ணறிவு - காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்.- சொற்றொடர்கள், எண்கள் மற்றும் உருவ வடிவங்களில் கொடுக்கப்படுகின்ற சிக்கலான விடயத்தில் பரீட்சார்த்திகள் காட்டுகின்ற அனுமானங்கள் மற்றும் பதில்களை ஆதாரமாகக் கொண்டு அப்பிரச்சினைகள் தொடர்பான பொருளறிவு, அளவிட்டுணர்தல் மற்றும் கால அவகாசங்களுக்கிடையிலான தொடர்புகளைப் புரிந்துகொள்வதில் பரீட்சார்த்திகளுக்கு இருக்கின்ற திறமையை அளவிடுதல்

(2) பொது அறிவு - காலம் : 1 மணித்தியாலம் - 100 புள்ளிகள்.- தேசிய, பிராந்திய மற்றும் உலகம் பூராவும் உள்ள பலதரப்பட்ட அமைப்புச் சுற்றாடல்களிலும் எமது சமூகத்திலும் நிலவுகின்ற சமூக, கலாசார, கல்வி, அரசியல், விஞ்ஞான, பொருளாதாரம் ஆகியவற்றோடு தொடர்புடைய ஏனைய காரணிகள் தொடர்பாகவும் உள்ள பரீட்சார்த்தியின் அறிவையும் கிரகித்தலையும் அளவிடுதல்

(3) மொழித்திறன் - (புரிந்துகொள்ளும் ஆற்றலும் கட்டுரை எழுதுதலும்) காலம் 2 மணித்தியாலம் - 100 புள்ளிகள்.- கொடுக்கப்பட்ட தலைப்புகள்/தொனிப்பொருட்கள் கூட்ட மொன்றிலி ருந்து பரீட்சார்த்தியினால் தெரிவுசெய்யப்பட்ட தலைப்பொன்றை/தொனிப்பொருளொன்றை மானசீகமாகக் கிரகித்து விமர்சன ரீதியில் சீர்தூக்கிப் பார்க்கும் திறமையினையும் அது தொடர்பான தகவல்கள், கருத்துக் களை ஒன்றுதிரட்டி ஒரு அமைப்பு ரீதியில் சமர்ப்பிக்கும் திறமையினையும் பரீட்சித்தல் மற்றும் குறிப்பிடத்தக்க அளவு சிக்கலான ஒரு பகுதியினை அல்லது ஆவணத்தின் ஒரு பகுதியை அல்லது விஞ்ஞாபனமொன்றைக் கிரகித்து அதிலுள்ள முக்கியமான கருத்துக்களைத் தெளிவாகவும் சரியாகவும் பரீட்சார்த்தியின் சொந்த வசன நடையில் தெரிவிக்கும் திறமையினைப் பரீட்சித்தல்.

9. **விண்ணப்பிக்கும் முறை.-** (அ) விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவ உருவில் அமைய வேண்டும் என்பதுடன், அதை 8 X 12 அங்குல (ஏ4) அளவுடைய ஒரு தாளின் இரண்டு பக்கங்களையும் பயன்படுத்தித் தயாரித்து பரீட்சார்த்தியே பூர்த்திசெய்தல் வேண்டும். 1 முதல் 5 வரை விண்ணப்பத்தின் முதலாம் பக்கத்திலும் 6 முதல் 10 வரை மறுபக்கத்திலும் இடம்பெறும் வகையில் விண்ணப்பம் தயாரிக்கப்படுதல் வேண்டும் என்பதை விசேடமாகக் கருதவும்.

(ஆ) பரீட்சார்த்தி எம்மொழியில் பரீட்சைக்குத் தோற்ற விரும்புகிறாரோ அம்மொழியில் விண்ணப்பம் அமைதல் வேண்டும்.

(இ) பரீட்சைக்காக பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் பணிப்பாளர்/ஆட்சேர்ப்பு, பயிலுனர்கள் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 6 என்னும் முகவரிக்கு 2010.09.06 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களைத் தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும். அத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) எல்லா வகையிலும் நிறைவுபெற்றிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பம் அஞ்சலில் தொலைந்துவிட்டமை அல்லது தாமதித்தமை பற்றிய முறைப்பாடுகள் எதுவும் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

10. **கட்டணம் :**

10.1.1 அனுமதிக் கட்டணம் ரூபா 300 ஆகும்.

10.1.2 இக்கட்டணம் அண்மையிலுள்ள மாவட்ட அல்லது பிரதேச செயலகத்திற்கு அரசிறைத் தலைப்பு 4000-20-03-20-13 இற்கு வரவு வைக்கும்படியான அறிவுறுத்தலுடன் விண்ணப்ப முடிவுத் திகதிக்கு முன்னர் செலுத்தப்படுதல் வேண்டும். மாவட்ட/பிரதேச செயலகத்திலிருந்து பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தினதும் பற்றுச்சீட்டினதும் புகைப்படப் பிரதிகளைத் தம்வசம் வைத்திருப்பது நல்லது.

10.2 இக்கட்டணம் முழுமையாகவோ பகுதியாகவோ மீள அளிக்கப்படமாட்டாது.

11. **விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் :**

11.1 விண்ணப்பம் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரர்களுக்கு பூர்வாங்க பரிசோதனை அழைப்புக் கடிதங்கள் அனுப்பப்பட்டதும் அதுபற்றி பத்திரிகைகளில் அறிவித்தல் வெளியிடப்படும். அத்தகைய அறிவித்தலை எதிர்பார்த்துக்கொண்டு அவதானத்துடன் இருக்குமாறு பரீட்சார்த்திகள் அறிவுறுத்தப்படுகின்றனர்.

11.2 அடிப்படைத் தகைமைகளைப் பரீட்சிக்கும் பரிசோதனையின் பின்னர் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பப் படுகின்ற பட்டியலுடனான விண்ணப்பங்களுக்காக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுமதி அட்டைகள் வழங்கப் படும். பரீட்சார்த்திகள் தங்கள் அனுமதி அட்டைகளை, கையொப்பங்களை அத்தாட்சிப்படுத்திக்கொண்டு பரீட்சைக் குத் தோற்றும் மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

11.3 விண்ணப்பதாரர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்திலேயே பரீட்சை எழுத வேண்டும். எந்தவொரு விண்ணப்பதாரரும் தமக்கு ஒதுக்கப்பட்ட பரீட்சை மண்டபம் தவிர்ந்த வேறு மண்டபத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

11.4 பரீட்சைத் திகதிக்கு ஆகக்குறைந்தது 7 நாட்களுக்கு முன்பாக அனுமதி அட்டையைப் பெற்றுக்கொள்ளாத விண்ணப்ப

தாரர்கள் அதனையிட்டு உடனடியாகப் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிக்க வேண்டும். அவருக்கு அறிவிக்கும் வேளையில் பின்வரும் தகவல்கள் வழங்கப்படுதல் வேண்டும் :

(1) விண்ணப்பித்த பதவி :----.
(2) பரீட்சையின் பெயர் :----.
(3) விண்ணப்பதாரரின் முழுப்பெயர் :----.
(4) முழு முகவரி :----.
(5) அஞ்சல் அலுவலகமும், பதிவு இலக்கமும், விண்ணப்பம் அனுப்பப்பட்ட திகதியும் :----.
(6) பணம் செலுத்திய இடம், செலுத்திய திகதியும், பற்றுச்சீட்டு இலக்கமும் :----.

11.5 பரீட்சைக்கு அனுமதித்தல் விண்ணப்பதாரரின் தகைமையை ஏற்றுக்கொள்வதாக அமையாது.

12. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை அத்தாட்சிப் படுத்தல்** :

12.1 அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம் அவர்களின் திணைக்களத் தலைவர்களால் அல்லது அவர் சார்பில் அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் உத்தியோகத்தரால் அத்தாட்சிப்படுத்தப் படலாம்.

12.2 ஏனைய விண்ணப்பதாரர்களைப் பொறுத்தமட்டில் அவர்களின் கையொப்பங்கள் அத்தாட்சிப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்டவர்களால் அத்தாட்சிப்படுத்தப்படலாம். அதாவது சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பகிரங்க நொத்தாரிசு, அரசாங்கப் பாடசாலை அதிபர், கடற்படை, வான்படை, தரைப்படையின் ஆணைபெற்ற அலுவலர் அல்லது ஆண்டொன்றுக்கு ரூபா 2,33,580 அல்லது அதற்குக் கூடுதலான சம்பளம் பெறும் நிரந்தர அரசாங்க அலுவலர்.

13. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின்போதும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியடையக்கூடியவாறு தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதன் பொருட்டு பின்வரும் ஆவணங்களில் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்படும் ஆளடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

14. **பொய்யான தகவல்கள் வழங்குதலுக்கான தண்டனை**.- இப்பரீட்சைக்கு ஏற்புடையதான ஒழுங்குவிதிகளின்படி எந்தவொரு விண்ணப்பதாரரும் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தகுதியற்றவரென காணப்படுமிடத்து, பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் பொழுதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எக்கட்டத்திலும் அவரின் பரீட்சார்த்தி உரிமை இரத்துச் செய்யப்படலாம். பரீட்சார்த்தி ஒருவர் அளித்த தகவல்களில் எவையேனும் அவரது அறிவுக்கு எட்டியவரையில் அல்லது அவர் வேண்டுமென்றே சில தகவல்களை மறைத்துள்ளார் எனக் காணப்படுமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவார்.

15. **ஆவணங்கள்**.- விண்ணப்பதாரர்கள் வேண்டப்படுமிடத்து பின்வரும் மூல ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் :

(அ) பிறப்புச் சான்றிதழ் (பாடசாலைத் தேவைகளுக்கு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் அல்லது ஞானஸ்தானச் சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.)

(ஆ) கல்விச் சான்றிதழ்கள் மற்றும் நடைமுறை அனுபவச் சான்றிதழ்கள்.

(இ) பாடசாலைச் சான்றிதழ் உட்பட நான்கிற்கு மேற்படாத குணநலச் சான்றிதழ்கள் ஆகக்குறைந்தது ஒரு சான்றித ழாவது விண்ணப்பதாரரின் போதனாசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெறப்பட்டதாயிருக்க வேண்டும்.

16. **ஆதரவு தேடுதல்**.- எவரேனும் ஒரு விண்ணப்பதாரர் தெரிவில் ஏதேனும் ஆதரவு தேடுதல் அல்லது செல்வாக்குப் பிரயோகிக்க எத்தணித்தல் அந்த விண்ணப்பதாரரை தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கு ஏதுவாகும்.

17. **ஆட்சேர்ப்பு நிபந்தனைகள்**.- இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும். விதவைகள்/விதுரர்கள்/அனாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புத் தொகை செலுத்துதல் வேண்டும்.

18. **பொது நிபந்தனைகள்** :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி I - தொகுதி (II) "அ" பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுக்கு உங்கள் கவனம் வேண்டப்படுகின்றது.

(ii) அனைத்துப் பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள் 1865 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க பொலிஸ் கட்டளைச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்களிலுள்ள ஏற்பாடுகளுக்கு உட்பட்டவர்களாதல் வேண்டும்.

(iii) உ. பொ. அ. (மருத்துவ உத்தியோகத்தர்) பதவி, உ. பொ. அ. (தகவல் தொழில்நுட்ப) பதவி, உ. பொ. அ. (சிவில் எந்திரவியலாளர் பதவி, உ. பொ. அ. (கட்டிடக் கலைஞர்) பதவி, உ. பொ. அ. (மின் எந்திரவியலாளர்) பதவி, உ. பொ. அ. (தொழில்நுட்ப எந்திரவியலாளர்) பதவி, உ. பொ. அ. (இலத்திரன் எந்திரவியலாளர்) பதவி, உ. பொ. அ. (விலங்கு மருத்துவர்) பதவி, உ. பொ. அ. (மேலைத்தேய மேள வாத்தியர்) பதவிக்காக விண்ணப்பித்துள்ள விண்ணப்ப தாரர்கள் சாதாரண பொலிஸ் சேவையில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியாது.

(iv) எல்லாப் பதவிகளுக்கும் ஆட்சேர்ப்பு செய்யப்படும் உத்தியோகத்தர்கள் அனைவரும் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சேவையாற்றுவதற்கு உட்பட்டவர்களாயிருப்பர்.

19. இந்த அறிவித்தலில் தரப்படாத வேறு ஏதாவது விடயங்கள் இருப்பின் அவை அமைச்சரவையின் தற்றுணிபின்படி தீர்மானிக்கப் படும்.

பாதுகாப்பு, பொதுமக்கள் பாதுகாப்பு,
சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சின்
கட்டளைப்படி,

கலாநிதி மஹிந்த பாலசூரிய,
பொலிஸ் மா அதிபர்.

பொலிஸ் மா அதிபர்,
பொலிஸ் தலைமை அலுவலகம்,
கொழும்பு 1,
2010.07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ்**

உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்ளைத் தெரிவுசெய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2010

(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சை மொழி மூலம் :
(சிங்களம்-2, தமிழ்-3, ஆங்கிலம்-4)
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் எழுதவும்.)

1. விண்ணப்பிக்கும் பதவி :----.
2. பெயர் :----.

2.1 முதலெழுத்துக்களை இறுதியாக குறிப்பிட்டு முதலெழுத் துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்- உ-ம் : SILVA, A.B.) :----.
2.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
2.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.
2.4 தேசிய அடையாள அட்டை இல. :

2.5 வழங்கப்பட்ட திகதி :

3. முகவரி :

3.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
3.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.
3.3 அலுவலக முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில், ஏற்புடையதாயின் மட்டும்) :----.
3.4 அனுமதி அட்டைப் பத்திரம் அனுப்பிவைக்க வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

4. 4.1 தேசிய இனம் :

சிங்களம்-1, தமிழ்-2, இந்திய வம்சாவழித் தமிழ்-3, முஸ்லிம்-4, ஏனைய-5.

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4.2 பால் : (பெண்-1, ஆண்-0)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4.3 திருமணமானவரா/திருமணமாகாதவரா ?
(திருமணமானவர்-1, திருமணமாகாதவர்-2)

(உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதவும்)

4.4 பிறந்த திகதி :

ஆண்டு : மாதம் : திகதி :

4.5 ..................... ஆந் திகதிக்கு வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

5. (i) பட்டம் பெற்ற திகதி :----.
(ii) பல்கலைக்கழகம்/நிறுவனம் :----.
(iii) பதிவு இலக்கமும் திகதியும் :----.
(iv) வெளிவாரி/உள்வாரி :----.
(v) பட்டம் :----.
(vi) பாடங்கள் :----.
(vii) வகுப்பு :----.
(viii) மேல் தரம்/குறைந்த :----.
(ix) பரீட்சை சுட்டெண் :----.
(x) பரீட்சைக்குத் தோற்றிய மொழி மூலம் :----.

6. உடல் நிலை :

(i) உயரம் : ----, அடி ----, அங்குலம்
(ii) மார்பு சுற்றளவு (விரிவடைகின்ற போது) ---- அங்குலம்
(ஆண் விண்ணப்பதாரருக்கு மாத்திரம்)

7. நீர் ஏற்கனவே பொலிஸ் சேவையில் ஏதாவது பதவி வகிக் கின்றீரா ? :----. அவ்வாறாயின் தற்போது வகிக்கும் பதவியையும் நியமனத் திகதியையும் குறிப்பிடவும் :----.

8. பற்றுச்சீட்டை நன்றாக ஒட்டவும். பற்றுச்சீட்டின் புகைப்படப் பிரதியொன்றை வைத்திருக்கவும் :

பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும்

9. விண்ணப்பதாரரின் உறுதியுரை.- எனது அறிவுக்கும் நம்பிக்கைக் கும் எட்டிய வரையில் என்னால் தரப்பட்ட தகவல்கள் யாவும் சரியானவையெனவும் .................... மாவட்ட/ பிரதேச செயலகத்திற்குப் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட .................... ஆம் இலக்க ...................... ஆந் திகதிய பற்றுச்சீட்டு இதில் ஒட்டப்பட்டுள்ளதென்றும் உறுதியுரைக்கின்றேன். மேலும் இப்பரீட்சை விதிகளுக்கு அமைந்தொழுகி நடக்கவும் இப்பரீட்சை நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரெனக் கண்டுபிடிக்கப் பட்டால், பரீட்சையின் முன்னரோ, பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்துச்செய்வதற்கு எடுக்கும் முடிவுகளை ஏற்றுக்கொள்வ தற்கும் இணக்கத்தைத் தெரிவிக்கின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

10. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் (வர்த்தமானி அறிவித்தலின் 10 ஆவது பந்தியின் பிரகாரம் இருத்தல் வேண்டும்.)

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கின்ற .............................. (முழுப்பெயர்) என்பவர் எனக்கு நன்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் எனவும் ................. ஆந் திகதி அவர் என் முன்னிலையில் கையொப்பமிட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் கையொப்பம்.

கையொப்பத்தை உறுதிப்படுத்துகின்ற
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (ஏற்புடையதாயின் மட்டும்) :

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................ என்பவர் ................................... திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையில் உள்ளவர் எனவும் அவர் இப்பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் அவரை சேவையிலிருந்து விடுவிக்க முடியுமெனவும் தெரிவித் துக்கொள்கிறேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பதவி :----.
திகதி :----.

7-652

---

## மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை - 2010

இப்பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2010 ஒக்டோபர் மாதம் நடத்தப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. (i) இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் உத்தரவிடப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும்.

(ii) பரீட்சாத்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் இலங்கைப் பரீட்சத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படவேண்டியேற்படும்.

(iii) இப்பரீட்சைக்காக விண்ணப்பிக்க முடிவது மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவியை வகிப்போர் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

(iv) இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குரிய 02 பாடங்களை ஒரு தடவையில் அல்லது 02 தடவைகள் தோற்றி சித்தியடைய முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**- இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக முதற் தடவையாகத் தோற்றும் விண்ணப்பதாரர் களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்பட மாட்டாது. அதற்குப் பின்னர் தோற்றுவதாயின் ரூ.400 பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும். (ஒரு பாடமாக இருப்பினும் ரூ.400) இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டின் எந்த மாவட்ட/பிரதேச செயலகத் திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப் படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டவேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது)

4. **விண்ணப்பப்படிவம்.**- விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைவாக இருக்கவேண்டும். இம்மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியில் தயாரிக்க வேண்டியதுடன் தலைப்பு இலக்கம் 1-3 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்கவேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சுப் பொறித்து தயாரிக்க முடியும் என்ற போதிலும் அதனை சரியாக தெளிவாக விண்ணணப்பதாரியின் கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும். இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சாத்தியினால் வலயக் கல்விப் பணிப்பாளர் / திணைக்களப் பொறுப்பாளரினால் 2010.08.20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பத்தரமுல்லை, பெலவத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். விண்ணப்பப்படிவத்துடன் நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்க வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் சரியான தகவல்களைக் குறிப்பிடாத விண்ணப்பப்படிவங்களும் விண்ணப்பிக்கும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப் படுவதுடன் அவ்விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றி விண்ணப்ப தாரியினால் கவனிக்க வேண்டியதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப் படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சாத்தியின் ஆளடையாளங்கள்.**- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தி அடையக்கூடியவாறு சுய அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங் களில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படும்.

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு.

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்ப தாரிகள் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்து தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

6. விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் பிரதியுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களினால் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு அவரின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிசெய்யப்பட்ட நிழற்படப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பது மிக முக்கியமாகும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களப்பொறுப்பாளரினால் கடமை விடுமுறை வழங்கவேண்டும். பிரயாணக் கொடுப்பனவுகள் செலுத்தப்படமாட்டாது.

8. தாம் கல்வி கற்கும் மொழி அல்லது அரச மொழி மூலம் வினாப்பத்திரத்திற்கு பதிலளிக்க வேண்டும். தாம் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும்.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்திரம் நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்**.- மேற்கூறப்பட்ட பதவிகளுக்குரிய பரீட்சை கீழ்க்கூறப்பட்ட பாடங்களைக் கொண்டதாக அமையும் :

| பாடம் | பாட இல | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (1) தாபன விதிக் கோவை மற்றும் நிதி ஒழுங்குக் கோவை | 01 | 100 | 3 மணித்தியாலயம் |
| (2) அபிவிருத்தி நிருவாகம் | 02 | 100 | 3 மணித்தியாலயம் |

(01) முதலாம் வினாப்பத்திரம் (தாபன விதிக்கோவை மற்றும் நிதி ஒழுங்குக் கோவை) :

(i) தாபன விதிக்கோவை I, II, VI, XII வாசகம்
(ii) தாபன விதிக்கோவையின் இரண்டாம் பிரிவின் சகல வாசகங்களும்
(iii) நிதி ஒழுங்குக் கோவை IV மற்றும் V வாசகங்கள்

(02) இரண்டாம் வினாப்பத்திரம் (அபிவிருத்தி நிருவாகம்) :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பின் பதின்மூன்றாவது மறுசீரமைப்பு

(ii) மாகாண சபைச் சட்டம் மற்றும் அதன் மறுசீரமைப்பு

(iii) அமைச்சின் ஒழுங்குக் கட்டமைப்பு மற்றும் அதன் பல்வகை மட்டங்களில் பொறுப்பளிக்கப்பட்டுள்ள கடமை விபரங்கள்
(சித்திக்காக புள்ளிகளில் குறைந்தபட்சம் 40% ஐ பெற்றுக்கொள்ளவேண்டும்.)

11. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

12. இப்பரீட்சையின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

சுனில் எஸ். சிறிசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை.
2010.07.05.

மாதிரி விண்ணப்பப் படிவம்

மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான முதலாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை - 2010

FIRST EFFICIENCY BAR EXAMINATION FOR MANAGEMENT ASSISTANTS RECRUITED FOR NATIONAL SCHOOLS UNDER THE CENTRAL GOVERNMENT - 2010

பரீட்சை இல: [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றிய மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 [ ]
(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1. முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ-ம் SUNIL.J.M.U.

1.1 முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டும் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.2 முழுப் பெயர் :----.
(சிங்களம் /தமிழ்)

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. சேவை இடம் மற்றும் முகவரி
1.1 கல்லூரியின்/கல்விக் கல்லூரியின் /ஆசிரிய கலாசாலையின்/அலுவலகத்தின் பெயர் :----.

1.2 கடமை முகவரி:----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3. தற்போது வகிக்கும் பதவி:----.
(நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்கவும்)

3.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.
3.2 நியமனத் திகதி:----.

4. தாங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் (வர்த்தமானி நான்காவது வாசகத்தைப் பார்க்கவும்

| தொ.இல | பாடம் | பாடஇல |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |

மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானது என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற தகைமை இருப்பதுடன் இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
பரீட்சாத்தியின் கையொப்பம்.

திகதி:----.

**குறிப்பு:** தமது திணைக்களப் பொறுப்பாளர் அல்லது திணைக்கள பொறுப்பாளருக்குப் பதிலாக ஒப்பமிட அதிகாரம் கொண்ட உத்தியோகத்தருக்கு முன்னால் விண்ணப்பதாரி ஒப்பமிட வேண்டும்.

பற்றுச்சீட்டை கழராது ஒட்டவும்(உரியதாக இருப்பின் மாத்திரம்)
(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது.)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில்/கல்லூரியில்/கல்விக் கல்லூரியில் ஆசிரிய கலாசாலையில் சேவையாற்றும் இவ் உத்தியோகத்தரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் திரு. /திருமதி /செல்வி ---- என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும்
பதவி முத்திரை (அதிபர் /பீடாதிபதி/
ஆசிரிய கல்லூரி அதிபர் /பதவிநிலை அலுவலர்).

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களப் பொறுப்பாளரின் சான்றிதழ்**

(1) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்ததாகவும் ;

(2) நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதி இணைக்கப்பட்டதாகவும் ;

(3) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்றும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.
(வலயக் கல்விப் பணிப்பாளர்/பீடாதிபதி/
திணைக்களப் பொறுப்பாளர்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி:----.
திகதி:----.

7-719/1

---

**மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை - 2010**

இப்பதவிக்குரிய உத்தியோகத்தர்களுக்காக உரிய அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு ஒழுங்கு விதிகளுக்கமைய இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் 2010 ஒக்டோபர் மாதம் நடத்தப்படும் என இத்தால் அறிவிக்கிறேன்.

2. (i) இப்பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுவதுடன் பரீட்சையை நடாத்துவது தொடர்பாக அவரினால் உத்தரவிடப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும்.

(ii) பரீட்சார்த்திகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்ட ஒழுங்குகள் வர்த்தமானி அறிவித்தலில் தனியாக அச்சிடப்பட்டுள்ளன. இச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு உட்படவேண்டியேற்படும்.

(iii) இப்பரீட்சைக்காக மத்திய அரசாங்கத்தின் கீழ் உள்ள தேசிய பாடசாலைகளுக்காக சேர்த்துக் கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவியை வகிப்போர் மாத்திரமே விண்ணப்பிக்க முடியும்.

3. **பரீட்சைக் கட்டணம்.**- இவ்வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்காக முதற் தடவையாகத் தோற்றும் விண்ணப்பதாரர்களிடமிருந்து பரீட்சைக் கட்டணம் அறவிடப்படமாட்டாது. அதற்குப் பின்னர் தோற்றுவதாயின் ரூ.400 பரீட்சைக் கட்டணம் அறவிடப்படும். (ஒரு பாடமாக இருப்பினும் ரூ.400) இப்பரீட்சைக் கட்டணத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இல் வைப்பிலிடக்கூடியவாறு நாட்டின் எந்த மாவட்ட/பிரதேச செயலகத்திலும் செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்ப

படிவத்தின் உரிய இடத்தில் கழராது ஒட்டவேண்டும். (பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை உங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது)

4. **விண்ணப்பப் படிவம்**.- விண்ணப்பப்படிவம் இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கமைவாக இருக்கவேண்டும். இம்மாதிரிப்படிவத்திற்கமைய A4 அளவு கடதாசியில் தயாரிக்க வேண்டியதுடன் தலைப்பு இலக்கம் 1-3 வரை முதலாம் பக்கத்திலும் எஞ்சியதை இரண்டாம் பக்கத்திலுமாக தயாரிக்கவேண்டும். விண்ணப்பப்படிவத்தை தட்டச்சுப் பொறித்து தயாரிக்க முடியும் என்ற போதிலும் அதனை சரியாக தெளிவாக விண்ணப்பதாரியின் கையெழுத்தினால் பூரணப்படுத்த வேண்டும். இதனடிப்படையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சாத்தியினால் வலயக் கல்விப் பணிப்பாளர் / திணைக்களப் பொறுப்பாளரினால் 2010.08.20 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறுபத்தரமுல்லை, பெலவத்தை பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். விண்ணப்பப்படிவங்களை அனுப்பும்போது கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயரைக் குறிப்பிட வேண்டும். மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப் படிவங்களும் சரியான தகவல்களைக் குறிப்பிடாத விண்ணப்பப் படிவங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படுவதுடன் அவ்விண்ணப்பப் படிவத்தின் நிழற்படப் பிரதியை வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது பற்றி வீண்ணப்பதாரியினால் கவனிக்க வேண்டியதுடன் அவ்வாறில்லாத விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

5. **பரீட்சாத்தியின் ஆளடையாளங்கள்**.- பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்தில் தோற்றும் சகல பாடங்கள் தொடர்பாகவும் பரீட்சை மண்டப பொறுப்பாளர் திருப்தி அடையக்கூடியவாறு சுய அடையாளங்களை உறுதிப்படுத்த வேண்டும். இதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட ஆவணங்களில் எவையேனும் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(1) ஆட்பதிவுத் திணைக்களத்தின் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை

(2) செல்லுபடியாகும் வெளிநாட்டுக் கடவுச் சீட்டு

மேற்கூறப்பட்ட ஆவணங்களை சமர்ப்பிக்க முடியாத விண்ணப்பதாரிகள் பரீட்சார்த்தி என்ற அந்தஸ்து தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

6. விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொண்ட உத்தியோகத்தர்களுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் பரீட்சை நேரசூசியின் பிரதியுடன் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும் பரீட்சைக்குத் தோற்றும் உத்தியோகத்தர்களினால் பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு அவரின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதிப்பத்திரத்தை சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு அனுமதிப்பத்திரம் இன்றி பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதிப்பத்திரம் அனுப்பப்பட்டவுடன் அது தொடர்பாக பத்திரிகை அறிவித்தல் இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு இரண்டு அல்லது மூன்று நாட்கள் கடந்த பின்னரும் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவத்தின் உறுதிசெய்யப்பட்ட நிழற்படப் பிரதி, பதிவுசெய்த பற்றுச்சீட்டு கொழும்புக்கு வெளிப்பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பது மிக முக்கியமாகும்.

7. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் உள்ள உத்தியோகத்தர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றக்கூடியவாறு திணைக்களப்பொறுப்பாளரினால் கடமை விடுமுறை வழங்கவேண்டும். பிரயாணக் கொடுப்பனவுகள் செலுத்தப்படமாட்டாது.

8. தாம் கல்வி கற்கும் மொழி அல்லது அரச மொழி மூலம் வினாப்பத்திரத்திற்கு பதிலளிக்க வேண்டும். தாம் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றியமைக்க அனுமதிக்கப்படமாட்டாது. பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடத்தப்படும்.

9. இப்பரீட்சை கொழும்பில் மாத்தரம் நடைபெறும்.

10. **பரீட்சை ஒழுங்கு விதிமுறைகள்**.- மேற்கூறப்பட்ட பதவி களுகக்குரிய பரீட்சை கீழ்க்கூறப்பட்ட பாடங்களைக் கொண்டதாக அமையும் :

| பாடம் | பாட இல | புள்ளிகள் | காலம் |
|---|---|---|---|
| (1) அலுவலக முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறைகள் | 01 | 100 | 3 மணித்தியாலயம் |

(01) முகாமைத்துவம் மற்றும் அலுவலக முறை (பாடவிதானம்) :

(i) பொதுமக்கள் தொடர்பாடல் மற்றும் தொடர்பு சாதனம்
(ii) பங்கேற்பு அபிவிருத்தி தொடர்பான சிந்தனைகள்
(iii) அரச துறையின் பயன்பாடு மற்றும் செயற்றிறன்
(iv) திட்டமிடல் மற்றும் அது தொடர்பான உபாயங்கள்
(v) செயற்திட்ட அறிக்கையை தயாரித்தல்- முன்னேற்ற மீளாய்வு மற்றும் செயற்திட்டங்கள்
(vi) ஆவணப் பேணுகை
(சித்திக்காக மேற்கூறப்பட்ட வினாத்தாளுக்காக குறைந்தபட்சம் 40% ஐ அல்லது அதனைவிடக் கூடுதலாக உத்தியோகத்தர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.)

11. பரீட்சாத்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரத்தை வழங்கப்படுவது அவர் பரீட்சைக்குத் தோற்ற தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளதை ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது.

12. இப்பரீட்சையின் வர்த்தமானி அறிவித்தல் மூலம் ஒழுங்குகள் மேற்கொள்ளப்படாத விடயங்கள் தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

சுனில் எஸ் சிரிசேன,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
“இசுருபாய”,
பத்தரமுல்லை.
2010.07.05.

மாதிரி விண்ணப்பப் படிவம்

**மத்திய அரசாங்கத்தின் கீழ் தேசிய பாடசாலைகளுக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட முகாமைத்துவ உதவியாளர் பதவி வகிப்பவர்களுக்கான இரண்டாவது வினைத்திறன் தடைதாண்டற் பரீட்சை - 2010**

SECOND EFFICIENCY BAR EXAMINATION FOR MANAGEMENT ASSISTANTS RECRUITED FOR NATIONAL SCHOOLS UNDER THE CENTRAL GOVERNMENT - 2010

பரீட்சை இல: ☐
(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றிய மொழி :

சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4 ☐

(உரிய இலக்கத்தைக் கூட்டினுள் இடுக.)

1. முதல் எழுத்தை இறுதியில் குறிப்பிட்டு விண்ணப்பதாரியின் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) உ-ம் SUNIL J.M.U.

1.1 முதலெழுத்துக்களினால் குறித்துக்காட்டும் பெயர் :----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

1.2 முழுப் பெயர் :----.
(சிங்களம் /தமிழ்)

1.3 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

2. சேவை இடம் மற்றும் முகவரி

2.1 கல்லூரியின்/கல்விக் கல்லூரியின் /ஆசிரிய கலாசாலையின்/அலுவலகத்தின் பெயர் :----.

2.2 கடமை முகவரி:----.
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்)

3. தற்போது வகிக்கும் பதவி:----.
(நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதியை இணைக்கவும்)

3.1 நியமனக் கடிதத்தின் இலக்கம் :----.
3.2 நியமனத் திகதி:----.

4. தாங்கள் தோற்றும் பாடம்/பாடங்கள் (வர்த்தமானி அறிவித்தலின் நான்காவது வாசகத்தைப் பார்க்கவும்

| தொடர் இல. | பாடம் | பாடஇல |
|---|---|---|
| 01. | | |
| 02. | | |

மேற்கூறப்பட்ட விபரங்கள் சரியானது என்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலம் பரீட்சைக்குத் தோற்ற தகைமை இருப்பதுடன் இப்பரீட்சையை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு கட்டுப்படுவதாகவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

----,
பரீட்சாத்தியின் கையொப்பம்.

திகதி:----.

**குறிப்பு**.- தமது திணைக்களப் பொறுப்பாளர் அல்லது திணைக்கள பொறுப்பாளருக்குப் பதிலாக ஒப்பமிட அதிகாரம் கொண்ட உத்தியோகத்தருக்கு முன்னால் விண்ணப்பதாரி ஒப்பமிட வேண்டும்.

பற்றுச்சீட்டை கழராது ஒட்டவும் (உரியதாக இருப்பின் மாத்திரம்)
(பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது.)

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**

எனது அலுவலகத்தில்/ கல்லூரியில்/ கல்விக் கல்லூரியில்/ ஆசிரிய கலாசாலையில் சேவையாற்றும் இவ் உத்தியோகத்தரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிந்துள்ளதாகவும் திரு / திருமதி / செல்வி ---- என் முன்னிலையில் கையொப்பமிட்டதாகவும் உறுதி செய்கிறேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம் மற்றும் பதவி முத்திரை (அதிபர் /பீடாதிபதி/ ஆசிரிய கல்லூரி அதிபர் /பதவிநிலை அதிகாரி).

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

**திணைக்களப் பொறுப்பாளரின் சான்றிதழ்**

(1) மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்களை பரீட்சித்ததாகவும் ;

(2) நியமனக் கடிதத்தின் உறுதிசெய்யப்பட்ட பிரதி இணைக்கப்பட்டதாகவும் ;

(3) உத்தியோகத்தர் இப்பரீட்சைக்குத் தோற்ற தகைமை கொண்டவர் என்றும் இத்தால் உறுதிசெய்கிறேன்.

----,
சான்றுப்படுத்துபவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.
(வலயக் கல்விப் பணிப்பாளர்/பீடாதிபதி/ திணைக்களப் பொறுப்பாளர்)

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி:----.
திகதி:----.

7-719/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.